# கே.எம்.சி.எச் மருத்துவமனையில் புதிய கண்டுபிடிப்பு சிகிச்சை முறை

கோவை,மே.11-

கோவை மெடிக்கல் சென்டர் அண்டு ஹாஸ்பிட்டல் சார்பில் நரம்பியல் நோயான ஸ்பாஸ்டிசிட்டி (தசை நார் இறுக்க நோய்) சிகிச்சைக்கு புதிய முறை அறிமுகம்.

கை, கால்களில் திடீரென விறைப்புத் தன்மை ஏற்பட்டு, கடுமையான வலியை உண்டாக்கும் ஒரு நரம்பியல் கோளாறு ஸ்பாஸ்டிசிட்டி என்பதாகும். நரம்புகளில் மோட்டார் நியூரான்களின் தீவிர செயல்பாட்டால், நீட்டி முறுக்கும் எதிர்விளைவால் இது உருவாகிறது.

மூளையால் உருவாகும் ஸ்பாஸ்டிக் செரிபரல் பால்சி கோளாறுக்கு, ரிசோடமி சிகிச்சை உதவும். இது தசை இறுக்கத்தின் கூடுதல் செயலைக் குறைக்கும்.

50 வயதான, சேலத்தை சேர்ந்த சங்கரன் என்பவர் கடந்த 10 ஆண்டுகளாக கால், கைகளில் ஸ்பாஸ்ட்டிக் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார், மோட்டார் நியூரான் நோயாலும் அவதிப்பட்டார். கடந்த வாரம் இந்த புதிய முறை சிகிச்சையான பம்ப் பொருத்தியவுடன் நிவாரணம் பெற்றார். இந்த நவீன சிகிச்சையை, நரம்பியல் துறை சிகிச்சை நிபுணர் டாக்டர் அருள் செல்வன் மற்றும் வருகை நரம்பியல் துறை நிபுணர் டாக்டர்.ராம் நாராயணன் ஆகியோர் மேற் கொண்டனர், கோவையில் இந்த சிகிச்சை முதன் முறையாகும். இதனை பாராட்டி, மருத்துவ மனையின் தலைவர் டாக்டர்.நல்ல பழனிசாமி வாழ்த்தி னார். அவர் மேலும் கூறியதாவது :- கே.எம்.சி.எச். மருத்து வமனை உயர்தரமான சிகிச்சைகள் மற்றும் இது போன்ற புதுமையான மருத்துவ தொழில்நுட்பங்களை பிரயோ கிப்பதில் வல்லமையுடன் தொடர்ந்து செயல்படும் என்றார்.